★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 17உ சனி (30—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 18உ ஞாயிறு (1—7—56) [இதழ் 14

முழுச் சம்பளச் சலுகை

சென்னை, ஜுன் 29—

சர்க்கார் துவக்கப்பள்ளி ஆசிரியர்கள், (ஸ்தல ஸ்தாபனம், எய்டெட் பள்ளிகள் உட்பட) போலீஸ் கான்ஸ்டபிள்கள், தலைமை கான்ஸ்டபிள்கள், சர்க்கார் கடைநிலை ஊழியர்கள் ஆகியோரின் பிள்ளைகளுக்கு, உயர்நிலைப் பள்ளிகளில் 4-ம் படிவம் முதல் 6-ம் படிவம்வரை முழுக் கட்டணச் சலுகை தர அரசினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர். இப்பொழுது இப்பிள்ளைகளுக்கு பள்ளிக் கட்டணத்தில் பாதி தொகையைச் சலுகையாக அளிக்கப்பட்டு வருகிறது.

மேட்டூரில் அலுமினியம் தொழிற்சாலையாம்!

பத்துகோடி மூலதனத்தில் ஏற்பாடாம்!

பத்தாயிரம் டன் உற்பத்திக்கு இயந்திர வசதியாம்!

இடமும்—மின்சாரமும் தர சென்னை அரசாங்கம் முன்வந்து விட்டதாம்!

அதற்கான மூலப் பொருள் அமெரிக்காவில் ஆராயப்பட்டு வருகிறதாம்!

ஆனால் எப்பொழுது துவங்குவது என்பதில் மட்டும் முடிவு தெரியாதாம்!

வர்த்தக மந்திரி கிருஷ்ணமாச்சாரியார் தித்திக்கும் சேதி தருகிருர்!

சென்னை, ஜுன் 29—

அலுமினியத்திற்குத் தேவைப்படும் மூலப்பொருள் பாக்சைட்; அப்பொருள் ஏராளமாகக் கிடைக்கிறது, சேலம்-மேட்டூர் சுற்றுப்புறங்களில்!

அதைத் தோண்டியெடுத்து வடநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது மிகமிகக் குறைந்த செலவில் அச்சுரண்டல் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

வடநாட்டில் இரண்டு இடங்களில் அலுமினியத் தொழிற்சாலைகள் உள்ளன. அங்கு கொண்டு செல்லப்படும் சேலத்து மூலப்பொருள், அலுமினியத் தகடுகளாக மாற்றப்பட்டு, அதன் பின்னர் தினசரி பயன்படத்தக்க சிறிய பெரிய பாத்திரங்களாகவும், வேறு பல பொருட்களாகவும் உருவாக்கப் பயன் படுகின்றன.

உருவாக்கப்பட்ட பொருட்கள் தென்னுட்டிற்குக் கொண்டு வரப்படுகின்றன. கவர்ச்சிகரமான அப்பொருட்களை மிகு விலை கொடுத்து நாமும் வாங்கி நமது வீடுகளில் கையாளுகிருேம்.

சேலத்திலேயே ஒரு அலுமினியத் தொழிற்சாலையை ஏற்படுத்தி அங்கு கிடைக்கும் பாக்சைட் மூலப்பொருளைப் பயன்படுத்தி, பலருக்கு வேலை கொடுத்து, தொழில் வளர்ச்சியையும், செல்வப் பெருக்கத்தையும் தென்னுட்டிற்கு உரித்தாக்கவேண்டும் என நாம் பல ஆண்டுக் காலமாக வற்புறுத்தி வந்துள்ளோம். டில்லி ஆதிபத்தியம் அதுபற்றி கவலையற்றே இருந்துவிட்டது.

இருந்தாலும், சேலம் மேட்டூரில், 10,000 டன் அலுமினியத்தை உற்பத்திச் செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை, ரு. 10 கோடி மூலதனத்தில் அரசாங்கத் துறையில் நிர்மாணிக்கப்போவதாக சென்னை வந்துள்ள வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தித்திக்கும் சேதி ஒன்றைக் கூறியுள்ளார்.

மேட்டூரில், தொழிற்சாலையை நிறுவுவதற்குத் தேவையான ஒரு இடத்தைக்கூட, அத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருளை ஆராயவந்த அமெரிக்க நிபுணர்கள் நிர்ணயித்துவிட்டதாகவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தொழிற்சாலைக்காக, அவ்விடத்தை ஒதுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதற்கும், சென்னை அரசாங்கம் உடன்பட்டுவிட்டதெனவும் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிருர்.

தொழிற்சாலை இயங்கத் தேவைப்படும் மின்சாரத்தைக்கூட தருவதற்கு சென்னை அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

அதிகாரபூர்வமான கம்யூனிஸ்டு கட்சிக்கு தலைமுழுக்கு!

வடநாட்டில் 100 பேர்கள் புதிய கட்சி அமைத்தனர்!

கொள்கைத் துறையில் கம்யூனிஸ்டுகள் தவறுகள் பல இழைப்பதே காரணமாம்

ஜலந்தர், ஜுன் 28—

'கொள்கைத் துறையில் தவறுகள் பல இழைத்து வருவதால், இப்போதைய இந்திய கம்யூனிஸ்டு கட்சி, ஒரு மார்க்சிய கட்சியாக இயங்குவதினின்று ஒழிந்துவிட்டது; எனவே, புதியதோர் மார்க்சிய கட்சி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது"

என்று, கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகியுள்ள சுமார் நூறுபேர் கருத்தறிவித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இவர்கள் எல்லாம்கூடி புதிதாக, 'அகில இந்திய ஈசான் கட்சி' என்று ஒரு கட்சி அமைத்திருக்கின்றனர் என்றும், இந்தக் கட்சி அமைப்பிற்காக ஒரு அமைப்புக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலகியவர், அமிர்தசரஸ், பெரோஸ்பூர், சர்தாஸ்பூர், பெப்சு, இராஜஸ்தான் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் வந்திருந்தனர் என்றும், அவர்கள் கூட்டிய மாநாட்டிலேயே புதிய கட்சி அமைக்கும் திட்டம் உருவானது என்றும் தெரியவருகிறது.

இலங்கையில் பிரிட்டிஷ் தளங்கள்

கொள்கையளவில் உடன்பாடு?

லண்டன் ஜுன் 29—

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் விமான, கடற்படைத் தளங்களை திரும்பப் பெறுவதுகுறித்து கொள்கையளவில் பிரிட்டிஷ் பிரதமருக்கும்—இலங்கைப் பிரதமருக்குமிடையே உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டதாகவும், இது பற்றி இருவரும் அடுத்த வாரம் கூட்டறிக்கை வெளியிடுவர் என்றும் சர்க்கார் வட்டாரத்தில் செய்தி நிலவுகிறது.

தொழிலாளருக்கு வீடு கட்டித் தர டில்லி ஒதுக்கிய தொகை

சென்னை அரசாங்கம் பயன்படுத்தாததற்குக் கண்டனம்

சென்னை, ஜுன் 29—

தொழிலாளர்களுக்கான வீடு கட்டித்தரும் திட்டத்தை நிறைவேற்றுவதில் சென்னை மாநில அரசாங்கம் மந்தமாக நடந்து கொண்டதை ஆர். வெங்கட்ராமன் என்ற காங்கிரஸ் மக்கள் சபை உறுப்பினர் கண்டித்திருக்கிருர்.

'சென்னை சர்க்கார், இந்த அவசரமான விவகாரத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும்' என்றும் கோரியுள்ளார்

"இரண்டாண்டுகளுக்கு முன் டில்லி சர்க்கார், தொழிலாளருக்கான வீடுகட்டித் தருவதற்கென்று சென்னைக்கு ரூ. 2 கோடியும், பம்பாய்க்கு ரூ. 4 கோடியும் ஒதுக்கித் தந்தனர்.

ஒதுக்கப்பட்ட முழுத் தொகையையும் பம்பாய் பயன்படுத்திக் கொண்டிருக்கும்போது, சென்னை சர்க்கார் இதுகுறித்து ஏதும் கவலைப்படாமல் — 2 கோடி ரூபாயைப் பயன்படுத்திக்கொள்ளாமல் விடுத்திருக்கின்றனர்; இது வருந்தற்குரியதாகும்"

என்றும் அவர் பின்னி தொழிலாளர் சங்க மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிருர்.

சென்னை சர்க்காரின் அக்கறையின்மை!

ஒதுக்கிய தொகையையும் பயன்படுத்தாது விடுத்தனராம்!

மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

கோவில்பட்டி, ஜுன் 28—

"வீடு கட்டுவதற்கென முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூ. 38 கோடியை சென்னை சர்க்கார் உபயோகித்துக் கொள்ளத் தவறிவிட்டது வருந்தற்குரியது"

என்று, மத்திய தொழிலாளர் இலாகா அமைச்சர் கந்துபாய் தேசாய், இங்குள்ள லாயல் நெசவாலைத் தொழிலாளருக்கான 'காலனி'க்கு, கால்கோல் விழா நடத்தி வைக்கும்போது குறிப்பிட்டார், எனத் தெரிய வருகிறது.

"இதற்குக் காரணம், சென்னை சர்க்காரின் அக்கறையின்மை என்பதல்ல; மாருக, சர்க்கார் தன் கவனத்தை வேறு முனைகளில் திருப்பியிருந்ததே என்று நான் அறிகிறேன்", என்றும் அவர் கூறினாராம்!

மாநில சர்க்கார் ஒதுக்கப்படுகிற தொகையினை முழுவதுமாக உபயோகித்துக் கொள்ள வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தாராம் அவர்!

ஒரு வீடு கட்ட ரூ. 1,050 செலவு!

புயலின் கோர விளைவால் பாதிக்கப்பட்ட பகுதியான அறந்தாங்கி வட்டத்தில், குறைந்த வருமானக்காரர் வீடுகட்டும் திட்டத்தின்கீழ் இரு இல்லங்களை நடைமுறையாக அமைக்க, மாநில அரசினர் அனுமதித்துள்ளனராம். ஒரு இல்லம் அமைக்க ரூ 1,050 செலவாகுமாம்.

மாடி இடிந்து...!

இலட்சுமணபுரி, ஜுன் 29—

இரட்டைமாடி கொண்ட ஒரு இல்லத்தின் மண்சுவர் எதிர்பாராதவிதமாக திடீரென இடிந்து விழுந்து 28 பேர் இறந்துவிட்டனரென்றும், 27 பேர் காயமுற்றனரென்றும் தெரியவருகிறது

கிளைக் கழகத் தோழர்களே! உங்கள் ஊரில் வயதுவந்தோர் அனைவரையும் உடன் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளுமாறு தூண்டுங்கள்!

—தலைமைக் கழகம்

நம் நாடு

சென்னை 30—’56 சனி

யார் பொறுப்பாளி?

மிகுதியானப் பணச் செலவிற்கும், விரும்பத் தகாத பல அரசியல் விளைவுகளுக்கும் உறைவிடமாக இன்றைய நேரடி தேர்தல்முறை இருந்து வருகிறது; எனவே இதற்குப் பரிகாரமாக, அடிப்படையில் நேரடி தேர்தல் முறையையும், மேல் நிலையில் மறைமுகத் தேர்தல் முறையையும் மேற்கொள்வது குறித்துத் தீவிரமாகச் சிந்தித்து வருவதாக இந்தியப் பிரதமர் நேரு அறிவித்துள்ளார்.

இக்கருத்தின் உள்ளடக்கமாக உள்ள பெரும் கேடுகளை ஏற்கனவே ஆராய்ந்திருக்கிறோம். இன்றும் அதைத் தொடர்ந்தே சில கூறுகிறோம்.

இந்தியத் துணைக் கண்டம் போன்ற ஒரு பரந்த நாட்டில், நேரடியான வாக்கெடுப்பு முறைப்படி நடைபெறக்கூடிய ஒரு பொதுத் தேர்தலுக்கு, அதற்கொத்த வகையில் அதிகப்படியாகத்தான் பணச் செலவாகும் என்பது முன்கூட்டியே திட்டவட்டமாக அறியக் கூடியதேயாகும். செலவழித்தப் பிறகுதான் தெளிவாகத் தெரிந்துகொள்ளக்கூடிய சிக்கலான பிரச்சினையாக, நடைமுறை பொதுத் தேர்தல் செலவினம் இருக்கவில்லை. உண்மை இவ்வாறு இருக்க, இன்றைய பொதுத் தேர்தல் அதிகச் செலவிற்கு இடமளிப்பதாக இருக்கிறது என்பதைப் புதிதாகக் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்தவர்போல், இப்பொழுது இந்தியப் பிரதமர் கூற முன்வருவது வியப்புக்குரியதாகும். அதுவுமன்றி, அதையே ஒருபுகலாகக் காட்டி, நேரடித் தேர்தலை கைவிட்டு மறைமுகத் தேர்தலுக்குத் தாவ வழி தேடுவது, அதனினும் வியப்புக் குரியதாகும்.

மறைமுகத் தேர்தல் முறைக்குத் தாவ, இந்தியப் பிரதமர் கூறும் அதிகப் பணச்செலவு காரணம் பொருத்தமானதா இல்லையா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அம்மாற்றத்துக்குரிய மற்றொரு காரணமாக, அவர் குறிப்பிடும் இத்தேர்தல் முறையினுல் ஏற்பட்டுவிட்ட விரும்பத்தகாத அரசியல் விளைவுகள், மறைமுகத் தேர்தல் முறையை ஏற்பதினுல் எந்த அளவு குறைந்துவிடும் என்பதையும் அலசிப்பார்ப்போம்.

மேற்குறிப்பிட்ட விவகாரத்தின் உண்மையைக் கண்டறிவதற்கு முன், அவ்விவகாரத்தில் இரண்டறக் கலந்து நிற்கும் மற்ரொரு மூலமான உண்மையையும், முதற்கண் கண்டறிய வேண்டும்.

அதாவது, நேரடி பொதுத் தேர்தல் மூலம் விரும்பத் தகாத விளைவுகளை உருவாக்கி, அரசியல் துறைக்கு நிலையான களங்கத்தைத் தேடி வருபவர் எவர் என்பது கண்டறியப்பட வேண்டும்.

இக்கண்டறிதலுக்கு, அரசியல் தெளிவு, தர்க்கநூல் புலமை, வரலாற்றுப் பயிற்சி, பலகலைப் போதனை ஆக அனைத்தும் ஒருங்கே கற்றிருப்போர் தான் தேவை என்பதில்லை சராசரி மக்களுக்குள்ள சாமானிய அறிவே, இவ்வுண்மையைத் தெரிந்துகொள்வதற்குப் போதுமானதாகும்.

இந்தியத் துணைக் கண்டம் அரசியல் சுதந்திரம் பெற்ற காலத்திற்கு முன்னதாக, சட்ட சபைகளைக் கைப்பற்றும் முயற்சியில் காங்கிரஸ் கட்சித் தலையிட்டு புரிந்த அரசியல் பித்தலாட்டங்களின் உருபலனுக, அரசியல் வாழ்வு சீர்குலைந்து போன சோகக் கதையை இப்பொழுது நாம் கணக்கில் சேர்த்துக்கொள்ளவே வேண்டாம். விடுதலை வீரர்களின் போர் தந்திர முறைகள் அவைகளாகும் என, வேண்டுமானுல் அவைகளை பொருட்படுத்தாது ஒதுக்கித் தள்ளிவிடலாம்.

ஆனுல், அதே நியாயம் சுதந்திரம் பெற்ற பிறகு, தேர்தல் காலத்தில் காங்கிரஸ் கட்சி மேற்கொண்டு வந்த—வரும், கறைபடிந்த நடவடிக்கைகளுக்குத் துளியும் பொருந்தாது. இந்தியப் பிரதமர் நேரு குறிப்பிட்டுள்ளபடி, அரசியல் வாழ்வில் நிலை பெற்று இருக்கின்ற ஒழுங்கீனம், ஒழுக்கக் குலைவு, குற்றம், கறை, மாசு, களங்கம் ஆக அனைத்தும் காங்கிரஸ் கட்சி ஒன்றுமட்டுமே திட்டமிட்டுச் செய்துவரும் அரசியல் லீலாவினோதத்தின், ஒருங்கு திரண்ட விகார விளைவாகும். மன்னிக்க முடியாத இம்மாபெரும் குற்றத்திற்கு, வேறு கட்சிகளை, விளையாட்டிற்காக உள்ளாக்குவதற்குக்கூட, நாட்டு நடப்பில் சிறிதும் இடம் கிடையாது.

இந்த மகத்தான உண்மையை இந்தியப் பிரதமரே கூட பலமுறை சுட்டிக்காட்டியுள்ளார். பல பொறுப்புள்ள பதவிகளில் இருந்துவரும் காங்கிரஸ் தலைவர்களும்கூட, காங்கிரஸ் கட்சியில் இன்று புழுத்துக் கிடக்கும் இவ்வரசியல் ஒழுங்கக்கேட்டை ஒளிவு மறைவு இல்லாது, வாய்ப்பு நேரும்பொழுது எல்லாம் இடித்துரைத்துள்ளனர். இன்றும் அதை முன்னிலும் தீவிரமாகச் செய்து வருகின்றனர்.

ஆதலால், இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியல் வாழ்வில் படிந்துள்ள கறை நேர்முகத் தேர்தல் முறையின விளைவல்ல — காங்கிரஸ் கட்சி வேண்டுமென்றே செய்துவரும் அதிகார அரசியல் திருக்கூத்தின் உடனடி விளைவாகும் என்பது முக்காலும் உண்மையாகும். எனவே, நேர்முகத் தேர்தலைக் கைவிட்டு மறைமுகத் தேர்தலுக்குத் தாவுவதினுல், இந்தியப் பிரதமர் விரும்புவதாகச் சொல்லும், விரும்பத் தகாத விளைவுகளை அரசியல் வாழ்விலிருந்து விரட்டியடிப்பது சாத்தியமாகாது என்பதும் உறுதியாகும்.

அரசியல் வாழ்வு புனிதப்பட வேண்டுமானுல், அதற்கு மேற்கொள்ளத்தக்க ஒரே ஒரு மார்க்கந்தான் உண்டு. அது உலக வரலாற்ருல் வரையறுக்கப்பட்ட ஆற்றல் மிகுந்த வழியாகும். அதாவது புழுத்துப் போன காங்கிரஸ் கட்சியை ஆட்சிப் பொறுப்பில் இருந்து வெகு தொலைவுக்கு விரட்டியடிப்பதின் மூலம்தான், நேர்மை, நியாயம் நிரம்பிய அரசியல் வாழ்வை, மீண்டும் ஒருமுறை நிலையான கடைக்காலின் மீது நிர்மாணிக்க முடியும். இதை வெற்றிகரமாக நிறைவேற்றப் பொதுமக்கள் சூளுரைத்துக்கொள்ள வேண்டும்.

மைசூரிலும் ‘ஆச்சாரியார்கள்’!

அனுமந்தையாவை விழ்த்த திரைமறைவில் சதியாம்!

தேவன்கரை, ஜுன் 28—

“என்னைப் பதவியிலிருந்து வீழ்த்த ஒரு சூழ்ச்சி வேலை செய்கிறது. மைசூர் மாநில அரசியல் பார்வைக்கு அமைதி நிறைந்ததாகத் தோன்றினுலும், திரைமறைவில் ‘திமிங்கலங்கள்’ விழுங்கக் காத்துக்கொண்டிருக்கின்றன”

என்று, மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா தேவன்கரை நகர சபை வரவேற்புக்கு பதிலளிக்கையில் பேசும்போது கூறினுரென, செய்தி ஒன்று கூறுகிறது

காரணமில்லாமலேயே சண்டை போட்டுக்கொண்டிருப்பது சிலருக்குத் தொழிலாகிவிட்டதென்றும், மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கோடி மக்களும், அதனுடன் சேர விருக்கிற மற்றொரு கோடி மக்களும் சேர்ந்து ஒற்றுமையாக முன்னேறுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்றும் அனுமந்தையா கேட்டுக்கொண்டார் எனத் தெரியவருகிறது

அனைவரும் ஒரே குடும்பத்தவராம்!

மொழிக்காகப் போராட்டம் கூடாதாம்!

அழகேசனின் அடிமைப் புத்தி!

செங்கற்பட்டு, ஜுன் 28—

‘ஒரு மொழியின் வளர்ச்சியானது, அதனைப் பேசுவோர் பின்பற்றும் வழிகளைப் பொறுத்திருக்கிறது தமிழுக்கோ அல்லது வேறு எம் மொழிக்கோ எவராலும், எத் தீங்கும் செய்துவிட முடியாது. தமிழர்கள் வேறு மொழிகளைத் தாமாகவே கற்க முன்வந்தால், மற்றவர்களும் தமிழைக் கற்க முன்வருவர்”

என்று, மத்திய துணை இரயில்வே அமைச்சர் ஓ. வி. அழகேசன் திருக்கழுக்குன்றம் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினுராம்!

“நாம் யாருடன் மொழிப்பிரச்சினை குறித்துப் போராடுகிறோம் என்பதை முதலில் உணர வேண்டும்; இந்தியர்களான நாமனைவரும் ஒரே குடும்பத்தினர்; நமக்குள்ளேயே சிறு சிறு தகராறுகளை வளர்த்துக்கொள்வது நமக்கே ஆபத்தாகும். சில கட்சிகள் இதற்காகப் பெரும் கூச்சல் கள்போட்டு, மக்களின் உணர்வைத் தூண்டும்படியான செயல்களில் இறங்குகின்றன. இதை ஒரு தேர்தல் பிரச்சினையாகவும் கொண்டுவரப்போகின்றனர். அரசியல் கட்சிகள் தம்மை இவ்வாறு பலப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைப்பது சிறுபிள்ளைத்தனமாகும்,”

என்று அழகேசனுர், அக்கூட்டத்தில் கூறினுராம்!

‘அம்பர் சர்க்கா’வுக்கு மேலும் சலுகை

சென்னை, ஜுன் 27—

அம்பர் சர்க்காவுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டிருப்பதாக அரசினர் அறிவித்துள்ளனர்.

‘உணவுப் பொருள்களுக்கு மீண்டும் கட்டுப்பாடுவராது’

மத்திய மந்திரி தரும் தகவல்

“உணவுப் பொருளுக்கு ‘கட்டுப்பாடு’ கொண்டுவரும் எண்ணம் சர்க்காருக்குச் சிறிதும் இல்லை,”

என்று, மத்திய உணவு இலாகா மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் தெரிவித்துவிட்டு மேலும் கூறியிருப்பதாவது :—

“இந்த உணவுக் கட்டுப்பாடு கொண்டுவருவதின் தீய விளைவுகளை நாம் ஏற்கனவே நிரம்ப அனுபவித்துள்ளோம்; எனவே, இனியும் கட்டுப்பாடு செய்யும் நோக்கம் எங்களுக்கு இல்லை.

“நானும் எனது மந்திரி சபையினரும் இது குறித்து தீவிரமாகச் சிந்தித்துவிட்டு, போதுமான கையிருப்பு வைத்துக் கொள்வதின் மூலம், விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

“10 இலட்சம் டன் அரிசி, 10 இலட்சம் டன் கோதுமை கையிருப்பாக வைத்திருக்கும் பொருட்டு அவற்றைச் சேகரிக்க முற்பட்டிருக்கிறோம். இந்த ஆண்டு இறுதிக்குள் சேகரித்து விடுவோம்

“கொள்முதல் விநியோகம் இவற்றிற்குக் கட்டுப்பாடு விதிக்காமலேயே, விலைகளைக் கட்டுப்படுத்தி, தாராளமாக உணவுப் பண்டங்கள் சந்தையில் கிடைக்குமாறு செய்ய முடியும் என நம்புகிறோம்.”

காலனி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம்

சீனப் பிரதமர் ஆதரவு

ஹாங்காங், ஜுன் 28—

‘மேற்கு கியூகினியை மீட்க இந்தோனேஷிய மக்கள் நடத்தும் போராட்டத்தையும், கோவாவைப் பெற இந்தியர் நடத்தும் அறப்போரையும் தேசிய உரிமைகளுக்குப் போராடும் அரபு மக்களையும், காலனி ஆதிக்கத்தை எதிர்த்து வரும் எல்லா ஆசிய—ஆப்பிரிக்க மக்களையும், மற்றவர்களையும் நாங்கள் ஆதரிக்கிறோம்; இவர்களின் போராட்டங்கள் எல்லாம் வெற்றி பெறுவது நிச்சயம்!” என்று, சீனப் பிரதமர் சூ-யென்-லாய் ஆதரவு தெரிவித்துப் பேசியுள்ளார்.

வட நாட்டு அகதிகளுக்குக்

கடன் உதவி

ரூ 12 கோடிக்குமேல் அளிக்கப்பட்டுள்ளது

புதுடில்லி, ஜுன் 28—

இடம் பெயர்ந்தவர்களுக்குக் கடனுதவியாக, 1956 மார்ச் இறுதி வரை புனர்வாழ்விப்பு நிதி நிர்வாக நிறுவனம், மொத்தம் சுமார் ரூ. 10,13,29,000 தந்திருக்கிறதாம்!

இதில், மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ளவர்களுக்கு ரூ. 7,07,81,000-மும், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ளவர்களுக்கு ரூ 3,05,48,000-மும் வழங்கப்பட்டிருக்கிறது.

1956 ஏப்ரல் 30-ந் தேதி வரையில், நிர்வாக நிறுவனம், கடனுதவியாக மொத்தம் ரூ 12,57,48,000 அனுமதித்துள்ளது. இதில் ரூ 8,21,76,000 மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கும், ரூ. 4,35,72,000 கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ளவர்களுக்கும் தரப்பட்டுள்ளது.

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ளவர்கள் புதிதாகச் சமர்ப்பித்த 5,915 விண்ணப்பங்கள் சம்பந்தமாக, மொத்தம் ரூ. 69,19,000 வழங்கப்பட்டது.

1956 ஏப்ரல் மாத இறுதிவரை மொத்தம் 87,308 விண்ணப்பங்கள் நிதி நிர்வாக நிறுவனத்துக்கு வந்திருக்கிறன. அவற்றில் 71,662 விண்ணப்பங்கள் பைசல் செய்யப்பட்டன.

பார்மோசா விடுதலை குறித்து செஞ்சீனப் பிரதமர்

சியாங் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்கிறர்

அமெரிக்காவின் தலையீட்டிற்குக் கடும் எச்சரிக்கை

“60 கோடி சீன மக்களும் பார்மோசாவை விடுதலை பெறச் செய்ய அசைக்க முடியாத உறுதி கொண்டுள்ளனர். பார்மோசாவை விடுவிக்க இரு வழிகள்தான் உண்டு—ஒன்று, யுத்தம்; மற்ருென்று, அமைதியான முறையில் முடிவு காண்பது; இதை, சீன சர்க்கார் பல முறை சுட்டிக்காட்டியிருக்கிறது,”

என்று, தேசீய மக்கள் காங்கிரஸ் கூட்டத்தில், சீனப் பிரதமர் சூ-யென்-லாய் தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் பார்மோசா விடுதலை பெறுவதற்கு வழி செய்யும்வகையில், தாம், பார்மோசாவில் பதுங்கியிருக்கும் தேசீய சீன சர்க்காரின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகவும், அதற்காக தேசீய சீன சர்க்காரின் தூதுக் குழுவினை எதிர்பார்ப்பதாகவும் அவா குறிப்பிட்டார்.

சியாங்-கே-ஷேக் சீனுவிலிருந்து துரத்தப்பட்ட பின், அவரது பிரதிநிதிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை என்பதே, இதுதான் முதல் முறையாகும்.

சீனப் பிரதமர் மேலும் சொன்னுர் :—

“பார்மோசாவை ஒரு இரண்டாவது சீனுவாக்க இன்னமும் சிலர் வீண் முயற்சி செய்துவருகின்றனர்; இது, சுத்த மோசமான நிலைமையாகும்; சீனுவின் ஒரு பகுதியாகவே சீனு எப்போதும் இருந்து வந்திருக்கிறது.

“பார்மோசா அதிகாரிகள் இனியும் அமெரிக்காவை நம்பிக்கொண்டிருக்க முடியாது; வீட்டிற்குள் ஓநாயை (அமெரிக்கா) விட்டுவைத்துக் கொண்டிருக்கின்றனர்; முதுகில் குத்தப்பட்டு கைவிடப்படக் கூடிய அபாயத்தில் அவர்கள் இருக்கின்றனர்.

“பார்மோசாவிலுள்ளவர்கள், தாயகத்தில் வசிக்கும் தங்களுடைய உறவினர்கள், நண்பர்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்தலாம்; குறுகியகாலத்திற்கு வந்து தங்கிச் செல்லலாம்.

“அமெரிக்காவின் தலையீடு காரணமாகப் பிளவுப்பட்டுப் பிரிந்திருப்பவர்கள், பார்மோசா விடுவிப்பதற்கு ஒத்துழைத்தால், அவர்களது பழைய தவறுகள் எத்தகையதாக இருப்பினும், அவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்டு, தண்டிக்கப்படமாட்டார்கள்.”

சீன உள்நாட்டுப் போரில், சியாங்கே-ஷேக்கின் தேசீய சர்க்கார் சீனுவிலிருந்து விரட்டப்பட்டது நினைவிலிருக்கலாம்.

'இயக்கத்தின் மறைந்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவோம்'

'அவர்கள் புரிந்த தியாகம் நமக்கு மேலும் ஆர்வமும் வீரமும் ஊட்டட்டும்'

மாநில மாநாட்டில் துணைப் பொதுச்செயலாளர் உரை

'இயக்கத்தின் மறைந்த மாவீரர்கள்' என்ற தலைப்பில், திருச்சி மாநில மாநாட்டில், துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி நடராசன் ஆற்றிய உரையின் சாரம் இங்கு தரப்படுகிறது :—

"நாம் இன்று, திருச்சியில் இத்தனை பெரிய மகத்தானதோர் மாநாட்டினைக் கூட்டியிருக்கிறோம்—இலட்சோப லட்சம் மக்கள் கழகத்தின் இலட்சியங்களையும், கொள்கைகளையும் ஆர்வத்தோடு பின்பற்றுகிற நிலைக்கு வளர்ந்திருக்கிறோம் என்பதை இந்த மாநாடு காட்டிக்கொண்டிருக்கிறது.

"இத்தனை வளர்ச்சியையும் நாம் பெற்றிருப்பதற்கு நாம் பட்ட கஷ்டநஷ்டங்கள், செய்த தியாகங்கள், சாதாரணமானவையல்ல

"நம்மிலே பல்லாயிரம் பேர் சிறைக் கொடுமைக்கு ஆளாகியிருக்கிறோம்! தடியடி தர்பாருக்கு இலக்காகியிருக்கிறோம்! கண்ணீர்ப்புகை குண்டுகளை தாங்கிக்கொண்டிருக்கிறோம்! துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானோரும் உண்டு! இவை மட்டுமின்றி—கல்லடி மட்டுமின்றி—சொல்லடியும் பட்டிருக்கிறோம். நம்மை ஏசியும், இழித்துப் பேசியும் வாழ்வை நடத்துபவர்களும் இன்றும் இருக்கிறார்கள்—அன்றும் இருந்திருக்கிறார்கள்.

"நம்முடைய இலட்சியத்தின் மீது பற்றுக்கொண்டவர்கள்—கொள்கைகளை வளர்க்கவேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்கள் செய்த மகத்தான தியாகத்தின் பலனாகவும்தான், நாம் இன்று திருச்சியில், இலட்சோப லட்சம் மக்கள் திரண்டிருக்கிற மிகப் பெரிய மாநாட்டைக் கூட்டுகிற அளவு வளர முடிந்திருக்கிறது.

"கழகத்தின் வளர்ச்சிக்காக, இயக்கத்தின் தோற்றத்திற்காகப் பாடுபட்டுத் தங்கள் வாழ்வை இயக்கத்திற்கு அர்ப்பணித்த மாவீரர்களுக்கெல்லாம், நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் அவர்கள் எல்லாம் புரிந்த ஈடு இணையற்ற தியாகத்தினை நாம் என்றென்றைக்கும் மறப்பதற்கில்லை. அவர்கள் புரிந்த தியாகம்—இன்றுள்ள நமக்கு மேலும் இயக்கத்தை வலுப்படுத்தவும், வளர்ச்சியடையச் செய்யவும் இலட்சிய ஈடேற்றத்திற்காகத் தொடர்ந்து போராடச் செய்யவும், நம்மைத் தூண்டுவதாக அமைந்திருப்பதாகும்.

"டாக்டர் டி. எம் நாயர், சர். பி. தியாகராயர், டாக்டர் நடேசன் போன்றவர்கள் எல்லாம், பார்ப்பனரல்லாத மக்களுக்கு, விழிப்பூட்டவும், அவர்களுக்கும் திறமையும், அறிவும் உண்டு என்பதை உலகு உணரச் செய்யவும் ஆக பெரிதும் பாடுபட்டவர்களாவர் பார்ப்பனரல்லாத இயக்கம் கண்டு, பார்ப்பனரல்லாத மக்களுக்காகப் பாடுபட்டவர்கள் எண்ணற்றோர்களாவர் அவர்களை எல்லாம் இன்று நாம் மட்டுமின்றி, பார்ப்பனரல்லாத சமுதாயம் அனைத்தும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

"பார்ப்பனரல்லாத இயக்கத்திற்குப் பிறகு நீதிக்கட்சியிலும், சுயமரியாதை இயக்கத்திலும், டபிள்யூ. பி. ஏ சௌந்திரபாண்டியன், நாகை மணி, மாயவரம் நடராசன் போன்ற எண்ணற்றோர், திராவிட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக—எழுச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தோற்றுவித்த விழிப்புணர்வு இன்று பெருகி, வளர்ந்திருப்பதை நாம் காணமுடிகிறது. அன்று, இப்படிப் பாடுபட்டு மறைந்துவிட்டவர்களுக்கு, நாம் நமது வீரவணக்கத்தைச் செலுத்துகிறோம்.

"திராவிடர் கழகமாக நாம் எல்லாம் இருந்த காலத்தில்தான், தோழர் பட்டுக்கோட்டை அழகிரிசாமி மறைந்தார்.

"அழகிரி, திராவிடர் இயக்கத்திற்காகப் பட்டபாடு—ஆற்றிய தொண்டு அளவிடக்கரியதாகும். அவர், தன் வாழ்நாள் முழுவதையும் கழகத்திற்கு அர்ப்பணித்திருந்தார்! தன் சொந்த வாழ்வை மறந்தார்! வீட்டில் மனைவி மக்களைப் பற்றி கிஞ்சிற்றும் கவலைப்பட்டவரல்லர்! கல்லடியும் சொல்லடியும் தாங்கிக்கொண்டு, பம்பரமாக-சூறுவளியாகச் சுற்றிச் சுழன்று, சுயமரியாதைச் சுடரொளி கொளுத்தி வந்தார். வறுமையிலேயே உழன்றுகொண்டிருந்த அவர், இயக்கக் கருத்துக்களை, பரப்புவதற்காகப்புரிந்த பணி மதிப்பிட முடியாததொன்றாகும் அந்த மாவீரனைத்தான் நாம் இழந்துவிட்டோம்.

"அவருக்கு முன்பாகவே, உடையார் பாளையம் ஆசிரியர் வேலாயுதத்தை நாம் பறிகொடுத்துவிட்டோம்!

"அவர், கழகக் கொள்கைகளை ஏற்று, நாட்டில் நடமாடுவது கண்டு பொறாத சிலர், அவரை உயிரோடுகொன்று, மரத்திலே தொங்கவிட்டார்கள் துள்ளத் துடிக்கச் சாகடித்தார்கள்! கொண்ட கொள்கைக்காக உயிர் துறந்த வீரர், அவர்!

"அவருக்கும் முன்பாக, தமிழ் மொழியைக் காக்க—இந்தித் திணிப்பை ஒழிக்க, கிளர்ந்தெழுந்து சிறை புகுந்த இரு வீரர்களை அன்றிருந்த ஆச்சாரியார் ஆட்சி பலி கொண்டது. அந்த வீரர்கள் தான் தாளமுத்துவும், நடராசனும்! தாய் மொழி காக்க, உயிர் தந்த வீரர்கள் அவர்கள்!

"பின்னர், தான்சார்ந்துள்ள இயக்கம் ஆதரிக்கிற ஒருவருக்காக, தேர்தலில் வேலை செய்தார் செல்லிக்குப்பம் மஜீத் என்ற கொள்கை வீரன்—ஒரு ஆலைத் தொழிலாளி! 'அவரது உயிரைக் குடித்தாலாவது, நாம் வெற்றிபெற முடியுமா?' என்று எண்ணிய எதிரிகள், மஜீத்தைக் கொன்று குவித்தனர்.

"சென்னையிலே, அதேபோல, தோழர் கே. எஸ். பாண்டியன் கொல்லப்பட்டார்.

"பின்னர், கடந்த 1953-ம் ஆண்டில் நாம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில், லால்குடி நடராசன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

"மற்றொரு தோழரும் பலி கொள்ளப்பட்டார். அதேபோல, தூத்துக்குடியிலும் சர்க்காரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு நான்கு பேர் வரை பலியாயினர்.

"இப்படி கழகத்திற்காக—இயக்கத்திற்காகப் பாடுபட்ட உத்தமர்கள், மறைந்துவிட்ட மாவீரர்களுக்கு நாம் இங்கே நன்றியும், வீரவணக்கமும் செலுத்துகிறோம். அவர்கள் செய்த தியாகம்—புரிந்த வீரப் பணி—செய்த தொண்டு—நமக்கெல்லாம் வழிகாட்டட்டும். பணியினை, எத்தனை கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டேனும் தொடர்ந்து செய்ய நமக்கு வீரத்தையும், உள்ள உரத்தையும் அளிக்கட்டும்."

நாணயத்தைத் தொடர்ந்து அளவைகள்

புதுடில்லி, ஜுன் 27—

தசாம்ச முறை அளவைகளை, நாட்டில் 1958 சனவரித் திங்கள் முதல் தேதியிலாவது அல்லது ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலாவது கொண்டுவர தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது பாராளு மன்றத்தின் அடுத்தக் கூட்டத்தில் இதற்கு அவசியமான சட்டம் கொண்டுவரப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

துவக்கப் பள்ளி ஆசிரியர்கள்

ஊதியம் உயர்வு

இந்திய சர்க்கார் சிபாரிசு அமுல் செய்யப்படுமா ?

புதுடில்லி, ஜுன் 29—

மத்திய சர்க்கார் கல்வி இலாகா, மாநில சர்க்கார்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையொன்றில், துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஏதாவது நிவாரணமளித்து, அந்தந்த இடங்களின் நிலைமைக்கேற்ப அவர்களின் ஊதியங்களை ஒரு குறைந்த விகிதத்திற்குக் கொண்டு வருவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. திட்டக் குழுவைக் கலந்தாலோசித்த பின்னரே, இந்திய சர்க்கார் இம்முடிவைச் செய்துள்ளதாம்

துவக்கப் பள்ளிக் கட்டிடங்கள் எளிமையாகவும், சிக்கனமாகவும் கட்டப்பட வேண்டுமென்றும், கிராமவீடுகள் 'மாதிரி'யில் கட்டடங்கள் இருக்கவேண்டுமென்றும், ஆனால், சூரிய வெளிச்சம், சுகாதாரம் போன்ற பிரச்சினைகளில் நியாயமான அளவுக்கு வசதிகள் இருக்க வேண்டுமென்றும் மாநில சர்க்கார்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பொதுத் தேர்தலுக்கான வேலைகள்

தமிழ் நாட்டில் அடுத்த கட்டம் செப்டம்பரில் துவங்குகிறது

சென்னை, ஜூலை 29—

அடுத்து வரும் பொதுத் தேர்தல்கள் சம்பந்தமாக, ஏற்பாடுகள் செய்யும் அடுத்த கட்டம், தமிழ் நாட்டில் செப்டம்பர் மாதம் முதல் துவங்குமெனத் தெரிகிறது.

வாக்காளர் பட்டியல்களைப் புதுப்பிக்கும் வேலை முடிந்ததும், அடுத்தபடி நடக்கவேண்டிய வேலை கவனிக்கப்படும். இறுதி வாக்காளர் பட்டியல்கள் அக்டோபர் 1-ந் தேதி வாக்கில் பிரசுரிக்கப்படும்.

வாக்காளர் தொகை தெரிந்த பிறகு அந்தந்த வட்டங்களில் எவ்வளவு வோட்டுப் பெட்டிகள் வேண்டுமென்பது தெரியும்.

பொதுத் தேர்தல்கள் திட்டமும் தேதிகளும் முடிவாகத் தீர்மானிக்கப்பட்டு, நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எல்லா ஏற்பாடுகளும் திட்டப்படி நடக்கவும், காலதாமதத்தினால் இடைஞ்சல் ஏற்படாமல் தடுக்கவும், அவ்வப்போது, ஏற்பாடுகளைப் பற்றிய உத்திரவுகள் மாவட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும். பல தொகுதிகளுக்கும் போதுமான அளவு வோட்டு பெட்டிகளும், வாக்குச் சீட்டுகளும் திட்டபூர்வமாகத் தயாரிக்கப்படும். தேர்தல்களை நடத்துவதற்குத் தயாராக அவை வைத்துக்கொள்ளப்படும்.

'ஓட்டுச் சாவடி'கள் அமைப்பதிலும் விசேட கவனம் செலுத்தப்படும். முந்தின தேர்தல்களின் அனுபவம், இடைத் தேர்தல்கள் அனுபவம் ஆகியனவற்றைக் கவனத்தில் வைத்துகொண்டு 'ஓட்டுச் சாவடி'கள் அமைக்கப்படும்.

சென்னை, பம்பாய், ஐதராபாத் ஆந்திரா, மைசூர், குடகு, திரு-கொச்சி மாநிலங்களின் பிரதம தேர்தல் அதிகாரிகளின் பிராந்திய மாநாடு அடுத்த மாதம் பெங்களூரில் நடைபெறக்கூடும்; அதிகாரிகள் அடுத்த தேர்தலில் செய்ய வேண்டிய ஏற்பாடுகளில், பல் வேறு பிரச்சினைகளைப் பற்றி ஆலோசிப்பார்கள்.

முன்கூட்டியே எல்லாவற்றையும் திட்டமிட்டுக்கொண்டு, சென்னை மாநிலத்தில் பொதுத் தேர்தலை ஒழுங்கான முறையில் நடத்துவதற்கு ஒவ்வொருவிதத்திலும் கவனம் செலுத்தப்படுமென்று உத்தியோக வட்டாரங்களில் கூறப்படுகிறது.

பலாத்காரத்தின் மூலம் அதிகாரத்தை கைப்பற்ற சூழ்ச்சியாம்

காங்கிரசிற்குப் 'பத்தினித்தன்மை' வந்துவிட்டதாம்

காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீமந்நாராயணன் கூறுகிறார்

இந்தூர், ஜுன் 28—

"கம்யூனிஸ்டுகள், வகுப்புவாதிகள் ஆகியோருடன் காங்கிரஸ் எப்போதும் கூட்டுசேராது. கம்யூனிஸ்டுகளும், வகுப்புவாதிகளும் அடுத்த பொதுத் தேர்தலில் பலாத்காரம் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்கின்றனர்; இதற்கு, காங்கிரஸ் இடங்கொடுக்காது'

என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமந்நாராயணன் குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறியுள்ளதாவது :—

"காங்கிரஸ் இப்போது பலாத்காரத்தின் சவாலை எதிர்க்க வேண்டியுள்ளது. பஞ்சாபில் 'ராஷ்டிரீய சேவா சங்க' புதிய போர்வையில் வேலை செய்யத் துவங்கியுள்ளது மற்றைய கிறவனங்களும் சூழ்நிலைகளுக்கேற்றவாறு 'பச்சோந்தி'களாக மாறிவருகின்றன. அரசியலார்மீது மக்களுக்குள்ள நம்பிக்கையை குலைப்பதற்கென்றே சில நிபுணர்கள், மாராட்டிரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றனர். இவையெல்லாம் பாசிஸ்டு சூழ்ச்சியாகும். இவை குறித்தெல்லாம் காங்கிரஸ் ஊழியர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

"மாநில சீரமைப்புப் பிரச்சினை குறுகிய மனப்பான்மையுடன் அணுகப்படுவது வருந்தத்தக்கதாகும். அண்மையில் நடைபெற்ற சம்பவங்களால் சிறுபான்மையினரிடையே நம்பிக்கை குலைந்திருக்கும் இடங்களில் அதைத் திரும்ப நிலைபெறச் செய்ய முனையவேண்டும். காங்கிரசார் கடமை உணர்ந்து உழைத்தால் பல சிக்கலானப் பிரச்சினைகள் தானாக மறைந்துவிடும்."

நிசாமிடம் போட்டி போலீஸ் படை

ஐதராபாத். ஜுன் 27—

ஐதராபாத் நிசாமின் தனி 'எஸ்டேட்'டில் சுமார் 1,000-பேருள்ள போட்டி போலீஸ் படையும், நிதி இலாகா, மற்றும் போட்டி இலாகாக்களும் இருப்பதாக ஐதராபாத் வழக்கறிஞர் பி ஜி. கேஸ்கர் தெரிவித்த தகவலின்மீது, இது பற்றி 'போலீஸ் கமிஷனர்' விசாரணை நடத்துமாறும், ஜூலைத் திங்கள் 14-ந் தேதிக்குள் அறிக்கை ஒப்படைக்குமாறும் மாவட்ட மாஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

சுவர் இடிந்து வீழ்ந்து 40 - பேர் மரணம்

இலட்சுமணபுரி, ஜுன் 28—

இலட்சுமணபுரியிலிருந்து 10-மைல் தொலைவிலுள்ள குர்சாத் 'மார்க்கெட்' பகுதியில் ஒரு இல்லத்தின் சுவர் இடிந்து வீழ்ந்ததால் 40 பேர்களுக்கு மேல் இறந்துவிட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டுள்ளது.

ஸ்டாலின் பெயர் படும்பாடு !

இலண்டன், ஜுன் 27—

ஸ்டாலின் பெயரிடப்பட்டு நடத்திவந்த மாஸ்கோ 'ஜிஜ்' மோட்டார் தொழிற்சாலையின் பெயர், இவ்வாரத்தில் இயற்கையெய்திய போக்குவரத்து அமைச்சரின் பெயரான 'லிகாசேவ்' என்று மாற்றப்பட்டதென்றும், இது கம்யூனிஸ்டு கட்சி அமைச்சரவை இரண்டின் முடிவு என்றும் கூறப்படுகிறது.

நில மானியம் கோரி 6,000 தியாகிகள் மனு

ஆந்திர மாநில மந்திரி விளக்கம்

நிலமானியம் கோரி 6,000 மனுக்கள் அரசியல் தியாகிகளிடமிருந்து வந்ததென்றும், 2,700 பேருக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளதென்றும் ஆந்திர ரெவினியூ அமைச்சர் கூறியுள்ளார்.

நாகார்சுனசாகர் போன்ற அணைக்கட்டுகளின் கீழ்வரும் நிலங்களை, தியாகிகளுக்கு மட்டுமே வழங்குவதென ஆந்திர அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம்.

நஞ்சையாயிருந்தால் ஐந்து ஏக்கரும், புஞ்சையாயிருந்தால் பத்து ஏக்கரும் தரப்படுகிறதாம்! தியாகிகளுக்குத் தருவதற்கான அளவில் அணைக்கட்டு நிலங்கள் ஆந்திராவில் இருக்கிறதாம்.

நிலமில்லாத ஏழைகளுக்கு இதுவரையில் 1,65,000 'பஞ்சார்' வழங்கப்பட்டிருக்கிறதென்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

உபரி சிப்பந்திகளுக்கு வேறு வேலை !

புதுடில்லி, ஜுன் 27—

இராணுவ இலாகாக்களில் அதிகப்படியாகவிருந்த சிப்பந்திகளில் இதுவரை 1,900 பேருக்கு மேல் வேறு இடங்களில் பதவிகள் பெற்றுள்ளனரென்றும், தற்காப்பு இலாகா முயற்சியால் அவர்களுக்கு வேலை கிடைத்துள்ளதென்றும் தெரிகிறது.

இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை அதிகாரிகள் இராணுவத் தொழிற்சாலைகளிலுள்ள 1,000 பேருக்கு நியமனம் தந்துள்ளனரென்றும், ஏற்கனவே, இத்தொழிலகத்தில் 900 பேருக்கு மேல் வேலைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளனரென்றும் கூறப்படுகிறது.

ம. பொ. சி. பொன் விழா

சென்னையில் சிறப்பான நிகழ்ச்சி

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்களின் 50-ம் ஆண்டு நிறைவு பொன் விழா நிகழ்ச்சி, 26—6—56 மாலை சென்னை அண்ணாமலை மன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு தமிழ்ப் பெரும் புலவர் இளவழகனார் தலைமை தாங்கினார்.

விழாவில் குழுமியிருந்த ஏராளமான பொது மக்களையும், இதரர்களையும், பொன் விழாக்குழுத் தலைவர் நடிகச் செல்வர் டி. கே சண்முகம் வரவேற்றார்.

பின்னர், தலைவர் முன்னுரைக்குப் பின் குன்றக்குடி அடிகளார், ம. பொ. சி-க்கு பொன்னாடை போர்த்தினர்.

தோழர் கி. வா. ஜெகன்னாதன், ம. பொ. சி. அவர்களின் தொண்டினைப் பாராட்டி ஒரு வெள்ளிப் பட்டயம் வழங்கினர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், சினிமா அதிபர் எம். ஏ. வேணு அவர்களின் அன்பளிப்பாக புதிய கார் ஒன்றை, ம. பொ.சி.-க்கு வழங்கினர்.

சினிமாத் துறையைச் சேர்ந்த மூனூஸ் தம்பதிகள், ஒரு ஒலிப் பதிவு இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கினர்கள்.

திருவாளர்கள் பி. டி இராசன், தேவன், தெ. பொ. மீட்சிசுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார், என். அண்ணாமலை (பிள்ளை) எஸ் குருசாமி, பா. ஜீவானந்தம், எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஆர். ராமசாமி, ஏ. பி. நாகராசன், எஸ். டி. சுந்தரம், ஆகியோர் ம. பொ. சி.-யை வாழ்த்தி—பாராட்டிப்பேசினர்.

ம. பொ. சி.-ஸயப் பாராட்டியும், வாழ்த்தியும் டாக்டர் சி. பி. இராமசாமி (அய்யர்) பி. கோபால் (ரெட்டி), அண்ணா, நெடுஞ்செழியன் முதலியோரிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

இறுதியாக, தோழர் எம். ஏ. வேணு அவர்கள், ம. பொ. சி-க்கு, பொன் விழாக் குழுவினர் திரட்டிய ரூ. 30,000 கொண்ட பண முடிப்பினை வழங்கினர்.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சி. எஸ். அப்பா உடையார் என்பார், ம. பொ. சி. அவர்களுக்கு ஒரு ஏக்கர் நிலம் அன்பளிப்பாகத் தந்தார்.

தனக்குத் தரப்பட்ட அன்பளிப்பிற்கும், கௌரவத்திற்கும் நன்றி தெரிவித்து ம. பொ. சி. அவர்கள் பேசுகையில், தமிழ் மொழி ஆட்சி மொழியாக வேண்டும் என்றும், தமிழ் நாட்டில் சமதர்மக் குடியரசு அமையவேண்டுமெனவும், அதற்காகத்தான் தொடர்ந்து பாடுபடுவதாகவும் தெரிவித்தார்.

ம. பொ. சி. அவர்கள் நீடூழி வாழ வாழ்த்தியும், அவரது தொண்டைப் பாராட்டியும் எண்ணற்ற வாழ்த்து இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டதுடன், ஏராளமான கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

நடிகச் செல்வர் டி. கே. சண்முகம் அவர்கள் நன்றி நவில விழா இனிதே முடிவுற்றது.

மேட்டூரில் அலுமினியம் தொழிற்சாலையாம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேலம் மாவட்டத்தில் எங்கெங்கு பாக்சைட் (மூலப் பொருள்) கிடைக்கிறதோ, அதில் ஐந்துஇடங்களில் கிடைக்கும் அப்பொருளை மொத்தத்தில் ஐந்நூறு டன் மதிப்புக்கு, தனித்தனியாக அமெரிக்காவிற்கு ஆராய்ச்சிக்காக அனுப்பிவைக்கும்படி, சென்னை அரசாங்க அதிகாரிகளை அமைச்சர் ஆச்சாரியார் விண்ணப்பித்துக் கொண்டுள்ளார்.

வர்த்தக அமைச்சர் கூறிய இவ்வளவு விவரங்களையும் கேட்ட எவரும், குறிப்பிட்ட அலுமினியத் தொழிற்சாலை அடுத்த ஆண்டு அல்லது அதற்கடுத்த ஆண்டு நிர்மாணமாகிவிடும் என்றுதான் எண்ணி மகிழ்வர்; ஆனால், அப்படி மகிழ்வது, அமைச்சரின் தவறாகாது—மகிழ்கிறவர்களின் தவறேயாகும்.

'மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை துவங்குவது பற்றி இறுதியாக முடிவு கட்டப்பட்டு விட்டதா?' என, வர்த்தக மந்திரியை ஒரு நிருபர் கேட்டுவிட்டார்.

அதற்கு அமைச்சர், "இந்நிலையில், அது எங்கள் (இந்தியப் பேரரசு) கருத்து; ஆனால், அமெரிக்காவில் செய்யப்படப்போகும் பாக்சைட் (மூலப் பொருள்) ஆராய்ச்சியின் விளைவைப் பெரிதும் பொறுத்திருக்கிறது அம்முடிவு," எனத் தயங்காது கூறிவிட்டார்.

அமெரிக்காவிற்கு ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட இருக்கிற பாக்சைட், சேலம் மாவட்டத்தில் பூமிக்கடியில் தன்னை மறைத்துக்கொண்டு இருக்கிறது; இனி அதைத் தோண்டி எடுக்கவேண்டும்; ஐந்து இடங்களில் கிடைத்ததைத் தனித்தனியாக அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யவேண்டும்; அங்கு நிபுணர்கள் அப்பொருளை ஆராயவேண்டும்; அதன் விளைவு பற்றி தெளிவாக அவர்கள் ஆராய்ந்து அறிவிக்க வேண்டும்.

அதன் பிறகு, புதிதாகத் தொழிற்சாலையை நிறுவுவதா அல்லது வடநாட்டில் இருக்கும் இரண்டு தனியார் தொழிற்சாலைகளை விரிவாக்க அனுமதிப்பதா என்ற சிக்கலான பிரச்சினையில் முடிவு காண வேண்டும். புதிய தொழிற்சாலையை நிறுவத்தான் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தால், அதற்குத் தேவைப்படும் பணத்தைத் தேடியாக வேண்டும்.

வடநாட்டில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு அரைகுறையான நிலையில் உள்ள திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்குப் பணம் வேண்டும். எனவே, ஒரு அலுமினியத் தொழிற்சாலையை, அதிலும் தென்னாட்டில் மேட்டூரில் துவங்குவதற்குப் பணம் ஒதுக்குவது முடியுமா-முடியாதா எனப் பார்க்க வேண்டும்.

இவ்வளவு தடைகளைக் கத்தரித்துக் கொண்டல்லவா, மேட்டூரில் ஒரு அலுமினியத் தொழிற்சாலை நிர்மாணிப்பது நிறைவேற வேண்டும்?

தனியார் துறையில் இராகுட் நகரில் இருந்துவரும் அலுமினியத் தொழிற்சாலையை விரிவாக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது என அமைச்சர் தெரிவிக்கிறார். அதுபோன்று இருந்துவரும் மற்றொரு தொழிற்சாலையின் உற்பத்தி அளவையும் கூட்டுவதாக முடிவு கட்டப்பட்டுவிட்டால், மேட்டூர் தொழிற்சாலை பற்றி கருதுவதற்குக்கூட இந்தியப் பேரரசின் உள்ளத்தில் இடமிலாது போகும். தென்னாடே! உனக்கு என்றைக்குத்தான் விமோசனமோ?

சென்னை நகரில் தடை உத்தரவு!

சென்னை, ஜுன் 29—

சென்னை நகர எல்லைக்குள் பொது இடங்களிலும், சாலைகளிலும் கூட்டங்கள் கூட்டுவது, ஊர்வலங்கள் நடத்துவது ஆகியவற்றிற்குத் தடை விதித்து, சென்னை நகர போலீஸ் கமிஷனர், நகர போலீஸ் சட்டம் 41-வது விதியின் கீழ் ஒரு தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

வரும் ஜுலை 1-ந் தேதியன்று, 'திராவிட நாடு பிரிவினை நாள்' கொண்டாடப்பட இருப்பதாகக் கமிஷனருக்குத் தகவல் கிடைத்ததாம். அந்தகு விழாவினை ஒட்டி நடைபெறும் ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும், மக்களின் ஒரு பிரிவினரின் மத நம்பிக்கையைப் புண்படுத்துவதாக அமையும் என்பதாலும், அவை, பொது அமைதிக்கு விரோதமான நிகழ்ச்சிகளில் கொண்டுபோய்விடும் என்பதாலும், பொது அமைதி, பாதுகாப்பு இவை கருதி அவற்றைத் தடை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும் அதிகாரி தனது உத்தரவில் கூறியிருக்கிறார்.

இந்தத் தடை உத்தரவு ஜுன் 30-ந் தேதி முதல் ஜுலை 13-ந் தேதி முடிய அமுலில் இருக்குமாம்.

வெள்ள நிவாரணம் பெற ஆள் மாருட்டம் செய்தவர்

நான்காண்டுக் கடுங்காவல் தண்டனை பெற்றார்

அவருக்கு சாட்சி கூறிய கிராமாதிகாரிக்கும் அதே கதி

மதுரை, ஜுன் 28—

வெள்ள நிவாரணம் பெறுவதில் ஆள் மாருட்டம் செய்த நபருக்கும், அதற்குத் துணைபுரிந்த கிராம அதிகாரிக்கும் கடுமையான தண்டனை விதிக்கப்பட்ட செய்தி கிடைத்துள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம், கல்லூரணி கிராமத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடந்த டிசம்பரில் நிவாரணம் அளிக்கப்பட்டபோது, இராமசாமி கவுண்டர் என்பார், இராமச்சந்திரன் என்பவர் தான்தான் என்றும், தன்னுடைய வீடுதான் வெள்ளத்தில் இடிந்தது என்றும் கூறி கையெழுத்துப் போட்டு ரூ. 20 வாங்கிக்கொண்டாராம். பணம் தந்த ரெவினியூ அதிகாரியிடம், இராமச்சந்திரன் இவர்தான் என்று பொய்ச்சாட்சி கூறினாராம், கிராம முன்சீப்.

இராமச்சந்திரன் என்பார், ஊரைவிட்டு மதுரையில் குடியேறி ஒரு தலைமுறையாகிவிட்டது என்றும், அவர் பெயரைக் கூறி வெள்ள நிவாரணம் பெறப்பட்டது மோசடி என்றும் தெரிந்தபின், வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த இராமநாதபுரம் மாவட்ட உதவி நீதிபதி, ஆள்மாருட்டம் செய்த நபருக்கும், அவருக்குத் துணை நின்ற கிராம முன்சீப்பிற்கும், தலா நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருக்கிறார் என்று தெரியவருகிறது.

இலஞ்சப் புகாருக்கு ஆளான

இராணுவ அதிகாரி!

இரண்டு ஆண்டுகளுக்கு உத்தியோக உயர்வு இல்லை

எர்ணாகுளம், ஜுன் 29—

இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் இலஞ்சம் பெற்றார் என்று குற்றம் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

கொச்சியில், எம். இ. எஸ். காரிசன் எஞ்சினியராக இருந்த கே. பி. நவாலே என்ற அந்த அதிகாரி, ரொக்கமாக ரூ. 1,000 மற்றும் வீட்டுச் சாமான்கள் முதலியனவற்றை ஒரு காண்டிராக்டரிடமிருந்து இலஞ்சமாகப் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

இதனை விசாரித்த எட்டு பேர் கொண்ட இராணுவ நீதி மன்றம் ஒன்று, நவாலே குற்றவாளி என்று கருதாவிட்டாலும், நாற்காலிகள் இரண்டு பெற்றிருப்பது, சந்தேகத்திற்கு இடமளிப்பதால், இரண்டாண்டுகளுக்கு உத்தியோகஉயர்வு கிடையாது என்ற தண்டனையுடன், கடுமையான எச்சரிக்கையும் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

***********************-*********************

வாக்காளர் பட்டியல்கள் திருத்த காலம் நீடிப்பு

★

தற்போது தயாரிக்கப்பட்டுவரும் வாக்காளர் பட்டியல்கள், அடுத்துவரும் பொதுத்தேர்தலில் பயன்படுத்தப்படுமாதலால், தகுதியுள்ளவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளுவதற்குப் போதிய அவகாசம் தரப்படுவதற்குக் கீழ்க்காணும் சட்டசபைத்தொகுதிகளைப் பொறுத்தவரையில்மனுச் செய்து கொள்ளவும், ஆட்சேபணைகள், திருத்தங்கள் ஆகியவற்றைத் தெரிவித்துக் கொள்ளுவதற்குமான காலவரையறையைத் தேர்தல் குழு நீடித்திருக்கிறது.

அறந்தாங்கி (தஞ்சை மாவட்டம்) டி. பாலூர்; ஜெயங்கொண்டான், அரியலூர் (திருச்சி மாவட்டம்); முதுகளத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்); மதுரை கிழக்கு,மத்திய மதுரை, திருப்பரங்குன்றம், நிலக்கோட்டை, மேலூர் (மதுரை மாவட்டம்)—ஜுலை 12.

கரூர், குளித்தலை (திருச்சி மாவட்டம்)—ஜுலை 14.

சிதம்பரம் (தென்னாற்காடு மாவட்டம்)—ஜுலை 17.

செய்யாறு (வடஆற்காடு மாவட்டம்)—ஜுலை 19.

பாடியக்கிரகாரம் (வடஆற்காடு); அதிராம்பட்டணம், பட்டுக்கோட்டை (தஞ்சைமாவட்டம்)—ஜுலை 24.

ஓமலூர் (சேலம் மாவட்டம்)—ஜுலை 25.

உடுமலைப்பேட்டை (கோவை மாவட்டம்)—ஜுலை 26.

தகுதியுள்ளவர்கள், தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர இந்த அவகாசத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தேவையான நமூனுக்கள் அந்தந்த மாவட்ட ரெவினியூ டிவிஷனல் அதிகாரிகள், தாசில்தார்கள், டெபுடி தாசில்தார்கள், முனிசிபல் கமிஷனர்கள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள், கிராம அதிகாரிகளிடம் இலவசமாகக் கிடைக்கும்.

*****************************-*********

வண்ணை—தமிழ் இளைஞர் கழகம்

1—7—56 காலை 10 மணிக்கு, தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில் தோழர் க. அப்பாதுரை அவர்கள், திருக்குறளில், 'இல்வாழ்க்கை' என்ற தலைப்பில் பேசுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

1—7—56 காலை 10 மணிக்கு, பெங்களூர்—அலசூர் முயற்சி மன்றத்தில், 'குடியேறியவர் உரிமை' எனும் தலைப்பில் தோழர் அ. மு. கண்ணன் தலைமையில், சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னைக் கல்விச் சங்கம்

1—7—56 மாலை 5 மணிக்கு, மேற்படி சங்க ஆதரவில், பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில் 'நல்லோர் நட்பு' எனும் பொருள் பற்றி திரு. த. வே. முருகேசனார் தலைமையில், திரு. வதா. ரா. செயராமன் பேசுவார்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

1—7—56 காலை 10 மணிக்கு சென்னை — சொருக்கையம்பதி எண் 15, நாகப்பநாய்க்கன் தெரு கழகப் பணிமனையில் தோழர் மு க. தமிழ்தம்பி தலைமையில், 'தேர்தலும்—நாமும்' எனும் தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

கிளைக் கழகச் செயலாளர்களே—உங்கள் ஊரிலுள்ள கழகத் தோழர்கள், தங்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து கொண்டார்களா — இல்லையெனில், அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, [illegible] சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.